2014 பிப்ரவரி 1]

பகுதிநேர நியாய விலைக் கடை கேட்கிறார். குறிப்பாக, பகுதிநேரக் கடை திறப்பதற்கு 150 கார்டுகள் இருந்தால் போதுமானது. கார்டுகளைப் பிரித்த பிறகு 500 கார்டுகள் தாய்க் கடையில் இருந்தால், அந்தக் கடையைப் பிரிப்பதற்கு வாய்ப்புண்டு. மேலும், 1½ கிலோ மீட்டர் தொலைவில் நியாய விலைக் கடை இருக்கவேண்டும் என்று சட்டவிதிகள் இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறது என்று கருதும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அந்தப் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கடை, எவ்வளவு தூரத்தில் இருக்கிறது, எவ்வளவு கார்டுகள் இருக்கின்றன என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அந்தப் பகுதி மக்களின் குறையைத் தீர்க்க உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

மேம்பாலம்

***35867—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் இருப்புப் பாதை கடவுக்கு மாற்றாக மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் இருப்புப்பாதை கடவுக்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கும் பணிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் சோழவந்தான் பகுதி மக்கள் 40 ஆண்டுக் காலமாகப் போராடி வந்த கோரிக்கையை, மூன்றாம் முறையாக முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்றதும் இந்தக் கேள்வி கேட்டு அதற்குப் பதில் வரும் முன்பே, நிதியொதுக்கீடு செய்து இருப்புப்பாதை கடவு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கும்பிட்ட கரம் விலகுமுன் வரம் தரும், தமிழக மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும், வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நெடுஞ்சாலையை இணைக்கும் வைகை ஆற்றுப் படுகையில், தரைப் பாலம் கச்சிராயிருப்பு முதல் சோழவந்தான் வரையிலும், மண்ணாடிமங்கலம் முதல் இரும்பாடி வரையிலும், குருவிக்கரைத்துறை வரையிலும் வைகை ஆற்றுப் பாலத்தை இணைக்கும்வகையில் தரைப்பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்:

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியை ஆய்வு செய்து, நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா

2014 பிப்ரவரி 1]

அவர்களின் அனுமதியைப் பெற்று, அங்கே பாலம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் வாடிப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட விராலிப்பட்டி கிராமத்துக்கும், மலை கிராமமான மீனாட்சிபுரத்தையும் இணைக்கக்கூடிய மலைச் சாலை ஒன்று ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்தது. தற்போது அந்தப் பாதையைச் சீரமைத்து, இந்த இரு கிராமங்களையும் இணைக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலுள்ள சாலைகளையெல்லாம் சீரமைக்க வேண்டுமென்று ஆணையிட்டு, படிப்படியாக, நிதி நிலைமைக்கேற்ப அவை அனைத்தும் சீரமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியிலும் வருகின்ற நிதியாண்டிலே பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் நகரத்தில் போக்குவரத்து நெரிசலினால் இயல்புநிலை பாதிக்கப்படுகிறது என்பதைக் கருத்தில்கொண்டு, குடியாத்தம் நகரின் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டன்யா ஆற்றின் கரைமீது ஒரு* Bye-pass *சாலை அமைக்கப்படுமா என்ற கேள்வியை இதற்கு*

முன்பு பல முறை இந்த அவையில் கேட்டு இருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கின்றார். ஆய்வு எந்த நிலையில் உள்ளது? பணிகள் எப்போது தொடங்கி முடிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் உள்ள எல்லா நகராட்சிப் பகுதிகளுக்குமே படிப்படியாக, நிதி நிலைமைக்கேற்ப, வட்டச் சாலைகள் அமைக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படி எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற குடியாத்தம் பகுதிக்கும் புறவழிச் சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

முற்பகல் 10—40

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
> எஞ்சாமை வேந்தற்கு இயல்பு"

என்ற வள்ளுவரின் வைர வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட திருப்புக்குழி, பொன்னேரிக்கரை, ஏனாத்தூர், வேடல், ராஜகுளம் போன்ற கிராமங்கள் சென்னை—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் அமைந்துள்ளன. அச்சாலையை கடந்து செல்லும் அப்பகுதி வாழ் மக்களுக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன. மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானாலும், விவசாய நிலத்திற்குச் செல்ல வேண்டுமானாலும், படிக்கின்ற மாணவர்கள் பள்ளிக்கூடம் போக வேண்டுமானாலும் அந்தச்

2014 பிப்ரவரி 1]

சாலையை கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது விபத்து ஏற்பட்டு, உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. உயிர்ச் சேதத்தைத் தவிர்ப்பதற்கு அப்பகுதிகளில் மேம்பாலங்களோ அல்லது சுரங்க நடைபாதைகளோ அமைத்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறையின்கீழ் பராமரிக்கப்படும் சாலையாக இருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு நடைபெறுகின்ற பிரச்சினைகளையொட்டி இங்கே கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். அவை, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு கடிதம் மூலமாகத் தெரிவிக்கப்பட்டு, அங்கு மேம்பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

பகுதிநேர நியாய விலைக் கடை

***19586—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆமூர் ஊராட்சி, ஆமூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS